புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
ISSN : 2456-821X
Peer-Reviewed
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/02 - March 2023

# அண்ணாவின் சிறுகதைகளில் சமூக எதார்த்தம்

**ஆய்வாளர்**

***கரு.வசந்தவள்ளி, பதிவு எண்.R20162665 / 2021-22***

*முழுநேரம் முனைவர் பட்ட ஆய்வாளர்*

*தமிழ் உயராய்வு மையம்*

*அழகப்பா அரசு கலைக்கல்லூரி*

*காரைக்குடி - 630 003*

**ஆய்வு நெறியாளர்**

*முனைவர் ச. முருகேசன்*

*இணைப்பேராசிரியர்*

*தமிழ் உயராய்வு மையம்*

*அழகப்பா அரசு கலைக்கல்லூரி*

*காரைக்குடி - 630 003*

**ஆய்வுச் சுருக்கம்**

*அரசியல் மட்டுமின்றி இலக்கியத்துறையிலும் சிறந்த படைப்பாளராக வலம் வந்துள்ள அண்ணா அவர்கள் தனது பேச்சின் மூலமாகவும், எழுத்தின் மூலமாகவும் பல்வேறு வகையான சமூகச்சீர்திருத்தக் கருத்துக்களை மக்கள் மத்தியில் எடுத்துச் சென்றுள்ளார். அண்ணாவின் படைப்புகளான கடிதங்கள், கட்டுரைகள், சிறுகதைகள், நாவல்கள், நாடகங்கள் போன்றவற்றுள் அவரது சிறுகதைகளில் இடம்பெற்றுள்ள சமூக எதார்த்தங்களை எடுத்தியம்புவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

**முன்னுரை**

*1909ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15ஆம் நாளில் கற்றோர் ஏத்தும் காஞ்சிபுரத்தில் தோன்றிய அண்ணா, தம் அறிவுத்திறத்தாலும், பெரியாரிடத்திலே பெற்ற பயிற்சியினாலும், 1949ஆம் ஆண்டில் தனி இயக்கம் கண்டார். 1967ஆம் ஆண்டு தமிழகத்தின் முதலமைச்சர் ஆனார். இரண்டாண்டுகாலம் தமிழகத்தை ஆட்சிசெய்தபோது 'சென்னை மாநிலம்' என்ற*

*பெயரைத் ‘தமிழ்நாடு’ என மாற்றி வரலாற்றுப் பெருமையடைந்தார். இந்த பெயர் மாற்றத்திற்கு அடிப்படையாக அமைத்தது அண்ணாவின் தமிழ்ப்பற்றே ஆகும்.*

***“முப்பது கோடி முகமுடையாள் உயிர்***
***மொய்ம்புற வொன்றுடையாள் – இவள்***
***செப்புமொழி பதினெட்டுடையாள் – எனிற்***
***சிந்தனை ஒன்றுடையாள்”[1]***

*தமிழ்பற்றும் தமிழ் முழக்கமும் தேசிய வரிகளுக்கினங்க ஏழை பணக்காரன், உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்னும் வேறுபாடற்ற மூடப்பழக்கத்தை நீங்கிய, சாதி சமய மாறுபாட்டை கடந்த, பகுத்தறிவு நெறியில் அமைந்து புதிய தமிழகத்தைப் படைக்க பெரிதும் விரும்பினார் அண்ணா. ஆகவே தனது பேச்சின் மூலமாகவும் எழுத்தின் மூலமாகவும் சமூக சீர்திருத்த கருத்துக்களைப் பரப்பினார். கடிதங்கள், கட்டுரைகள், சிறுகதைகள், நாவல்கள், நாடகங்கள் ஆகியவற்றை வெளியிட்டு அதன் மூலமாக தன்னுடைய கருத்துக்களை மக்கள் மத்தியில் எடுத்துச் சென்றார். தமிழ்நாடு என்பதைப்போலத் தமிழ் இலக்கியங்களும் அவர் நெஞ்சத்தைக் கவர்ந்தன. ஆகவே அரசியல் மட்டுமின்றி இலக்கியத்துறையிலும் சிறந்த படைப்பாளராக வலம் வந்துள்ளார். இவ்வாராக பல்துறை ஆற்றல் பெற்ற, அறிஞர் அண்ணா அவர்களால் எழுதப்பட்ட சிறுகதைகளில், சமூகத்தை தத்துவார்த்தமாகப் பதிவு செய்கிறார் என்பதை எடுத்தியம்பும் முகமாக இக்கட்டுரை உருவாக்கப் பெற்றிருக்கிறது.*

***எதார்த்தம்***

*அன்றாடம் நடக்கும் நிகழ்ச்சிகளை அப்படியே படம் பிடித்துக் காட்டுவது எதார்த்தமாகும். நடந்ததை நடந்தவாறு கூறுவது எதார்த்தமாகும்.* ***“நடப்பதை அல்லது உள்ளதைப் பற்றி உணர்வுப் பதிவைச் சாதாரண மனிதனுக்கு எப்படித் தோன்றுகிறதோ அப்படி படைத்துத்தரும் கலைக்கூறு அமைந்ததுதான் நடப்பியல் இலக்கியமாகும்.”[2]***

***சமூக எதார்த்தம்***

*மனிதர்களின் தொகுப்பே சமூகம். அதில் ஏழை பணக்காரன், உயர்ந்தோர், தாழ்ந்தோர், முதலாளி, தொழிலாளி என்று பல பகுப்புகள் உள்ளன., அவற்றுள் காணப்படும் உறவுமுறைகளும், உறவுமுறைகளுக்குள்ளே நடைபெறும் வேறுபாடுகளும் சமூக எதார்த்தமாகும்.* ***“சமூகத்தில் பல முரண்சக்திகள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆளுகின்றவர் – ஆளப்படுகின்றவர், இருப்பவர் – இல்லாதவர், கற்றவர் – கல்லாதவர் உயர் சக்தி – கீழ்சாதி, பெரும்பான்மையினர் – சிறுபான்மையினர் என்று பல வழிகளில் இயஙகும் முரண்சக்திகளுக்கிடையே ஓயாது சிக்கல்களும் தீர்வுகளும் நடந்த வண்ணம் இருக்கின்றன. இந்த முரண்சக்திகளின் தீவிரமான பிடிமானத்திற்குள் சிக்கிச்சிதைந்து போய் வாழ்விழந்து அலைபாய்கின்ற உயிர்கள் இந்த மண் ணில் ஏராளம். இத்தகய மனிதத்துயரங்கள்தாம் நம்மோடு***

***கூடவே தொடர்ந்து வருகின்றன. இத்தகய புள்ளிகளில் இருந்துதான் இலக்கியம் தனக்கான கருவிகளைத் தேர்ந்தெடுத்துக் கொள்கிறது."*[3] *சமூகத்தில் மனிதன் எப்படி வாவேண்டும் என்று கூறுவதைவிட எப்படி வாழ்கிறான் என்று கூறுவதே எதார்த்தமாகும்.* ***"வசன இலக்கியங்களில் முதன்முதலில் எதார்த்த நியைப் புகுத்தியவர் புதுப்பித்தனே"*[4] *அறிஞர் அண்ணா தன்னைச் சூழ்ந்துள்ள சமூகத்தின் போராட்டச் சூழலைப் பார்த்து எதார்த்தமாக தன் சிறுகதைகளைப் படைத்துள்ளார். அவ்வாறு அமைந்த சிறுகதைகளுள் நாட்டில்காடு, கடவுள்தண்டிப்பா, அவள் மிகப்பொல்லாதவள் போன்றவை குறிப்பிடத்தக்கன.*

- *அடிமைத்தனத்தின் இழிநிலையைப் பிரதிபளித்தல்*
- *ஆளும் வர்கத்து அதிகாரப்போக்கை சமூகதிற்குச் சுட்டுதல்*
- *சமூகத்தில் நிலவக்கூடிய மூடநம்பிக்கைகளை படம் பிடித்துக் காட்டல்*
- *சமூகத்தில் நிலவக்கூடிய தீண்டாமைத்தனத்தை களைய முற்படல்*
- *விதவை மறுமண ஆதரிப்பை சமூகத்தில் புகட்டுதல் போன்றவற்றை எதார்த்தமாக தனது கதைகளில் சுட்டிக் காட்டியுள்ளார்.*

*வல்லான் வகுத்ததே வாழ்க்கை என்பார்கள். உலகம் என்பதே உயர்ந்தோர் மேற்றே. சமூகத்தில் ஏதேனும் ஒரு கெட்ட நிகழ்வு நடந்துவிட்டால் ஏழை, எளிய மனிதர்களைத் தான் குறிவைக்கிறார்கள். வசதிபடைத்தவர்கள் குற்றவாளி என்றாலும் சமூகம் அவர்களைக் கண்டுகொள்வதில்லை. இந்நிலைமாற வேண்டும்.*

***"வெட்டுங்கள் தலையினை! என்றதோர் குரலிலே***
***வீழ்ந்ததே அடிமை எண்ணம்***
***விடுதலை! விடுதலை! என்னுமோர் இசையிலே***
***விளைந்ததே உரிமை எண்ணம்"***[5]

*கண்ணதாசனின் வரிகளுக்கிணங்க அடிமைத்தனத்தின் இழிநிலையை நாட்டில்காடு என்னும் சிறுகதைகளில் சுட்டிக்காட்டியுள்ளார். கருப்பி என்னும் ஏழ்மைக்குடிப்பெண் ஊர்பெரியவரான மல்லீசுரர் மற்றும் அரவது தம்பி மார்க்கண்டான் ஆகியோரால் விபசாரியக்கப்படுகிறாள். அவளது நிலைமை உணர்ந்த வேலன் கருப்பியை திருமணம் செய்ய முன்வரும் தருணத்தில் மல்லீசுரான் தமிபி இதனை மறுக்கவே கருப்பியால் கொள்ளப்படுகிறான். பிறகு கருப்பி தானும் கிணற்றில் விழுந்து இறக்கிறாள். பேயடித்து மார்க்கண்டான் இறந்ததாகவும், பேய் கருப்பியை கிணற்றில் தள்ளிவிட்டதாகவும் கூறி மல்லீசுரான் அதிகாரத்தால் வழக்கு முடிக்கப்படுகிறது. ஏழை மக்களின் இழிநிலையையும், பணக்கார வர்க்கத்தின் ஆளுமையையும் எதர்த்தமாக அறிஞர் அண்ணா படம் பிடித்துக் காட்டுகிறார். அது மட்டுமின்றி, சமூகத்தில் நிலவக்கூடிய மூடநம்பிக்கைகளையும் இக்கதையின் வாயிலாக எடுததுரைக்கிறார்.*

**மூடநம்பிக்கை**

*மாற்றத்தின் அடிப்படையில் மக்கள் அறிவை செலுத்தமுற்பட்டாலும் கூட சமுதாயப் பழக்கவழக்கங்களால் முட்டுக்கட்டை போன்று இடையூறுகள் விளைவிக்கப்படுகின்றன. ஆகையால் நாம் அறிவை இழந்து ஆயிரமாயிரம் ஆண்டுகளாக ஏமாற்றப்பட்டு, மிரட்டப்பட்டு வந்திருக்கிறோம்.* ***"தெளிவும், விளக்கமும் இல்லாமல் ஒரு கருத்தை ஏற்றுக்கொள்வது நம்புவதுமாகும். இந்த மூட நம்ப்பிக்கை என்பது மனிதச் சமுதாய வாழ்வுக்கு இன்றியமையாததாக ஆகிவிட்டது. ஏனெனில் சமுதாய அமைப்பு என்பது இயற்கைக்கு மாறுட்ட தன்மையில் அமைக்கப்பெற்றிருப்பதாகும்."[6]***

***"தனது புத்திக்கும் பிரத்தியட்ச அனுபவத்திற்கும் தோன்றுவதை நம்பாமல் எவனோ ஒருவன் எப்போதோ சொன்னதை நம்பி வாழ்வை நடத்துபவன் பெரிய மூடன்"[7]*** *என்ற பெரியாரது வரிகளுக்கிணங்க அறிஞர் அண்ணா அவர்களும் மூநம்பிக்கை அகற்றப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளார்.*

**நடுவுநிலைமை**

***"பொன்செய் கொல்லன் தன்சொல் கேட்ட***
***யானோ அரசன் யானே கள்வன்"[8]***

*என்று கூறிக் கீழ் விழுந்து, தனது உயிர் துறந்த பாண்டியன் நெடுஞ்செழியனைச் சிலப்பதிகாரக் காலத்தில் காணமுடிகிறது. நடுவுநிலைமை என்ற ஓர் அதிகாரத்தையே உருவாக்கிய 'நெஞ்சத்துக்கோடாமை' சான்றோர்க்கு அணி என்றார் வள்ளுவர். இப்படிப்பட்ட இந்த நாட்டில் இன்று காவல்துறையிலும் நீதிமன்றத்திலும் சில புல்லுருவிகள் இருந்துகொண்டு இத்தத் துறைகளின் மேல்உள்ள நம்பிக்கையை மக்கள் இழக்கும்படிச் செய்துகொண்டிருக்கின்றன.*

*ஒரு அரசே தவறு செய்தாலும், அதனைத் தண்டிக்கும் மிகப் பெரிய பொறுப்பு ஒரு நீதிபக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. மேலும் அரசு அதிகாரிகள், காவல்துறை, ஆட்சியாளர்கள் இறுதியாக நீதிபெற வாய்ப்பளிக்கும் ஒரே இடம் நீதிமன்றம். ஒரு நாட்டின் மற்ற எல்லாப்பதவிகளையும் விட அதிகப்பொறுப்பு, அதிகாரம், கடமை கொண்டது நீதிபதி பதவி, நீதிபதியின் தீர்ப்பில் குடிமக்களின் உயிர், உடமை, உணவு ஆகியவற்றின் பாதுகாப்பு அடங்கியிருக்கிறது. ஆகவே எந்த ஒரு காரணத்திற்காகவும், தெரிந்து தவறான தீர்பு வழங்கும் நீதிபதியின் குற்றத்தை ஒரு சாதாரண குற்றமாகக் கருதிவிடமுடியாது என்பதை வலியுறுத்தும் விதமாக 'நாட்டில் காடு' என்னும் சிறுகதையில் கருப்பியின் வழக்கு பொய்யாகச் ஜோடிக்கப்பட்டு முடித்தமையை எடுத்துக்காட்டி சமூகத்தின் எதார்த்தத்தைப் பதிவிட்டுள்ளார் அறிஞர் அண்ணா.*

**ஒடுக்கப்பட்டோர் இழிநிலை**

சமூகத்தில் பல்வேறு இடங்களில் பல்வேறு சூழளில் பல்வேறு மக்களால் சமுதாயத்திற்கு புறம்பான செயல்கள் நடைபெற்ற வண்ணம் உள்ளது. இருப்பினும் மக்கள் அதைக் கண்டும் காணாததைப் போன்று, தான் உண்டு தன் வேலை உண்டு என்று செயல்பட்டுக் கொண்டிருக்கின்றனர். இதனையே

**"ஒல்லும் வகையான்றவினை யோவாதே**
**செல்லும் வா யெல்லாஞ் செயல்"[9]**

ஒருவன் தன்னால் முடிந்தவகையில் அறச்செயல்களை இடைவிடாமல் அவற்றுக்குத் தேவை ஏற்பட்ட பொழுதுதெல்லாம் செய்தல் வேண்டும். நல்வினை ஒன்று நடைபெற வேண்டுமென்று குறிப்பிட்ட ஒரு சூழலில் ஒரு தேவை ஏற்படுமானால் அந்தத் தேவையினைக் கண்டும் காணாததுபோல் இருந்துவிடாமலும், அந்தச்சூழலில் இருந்து நழுவித் தப்பித்துக் கொள்ளாமலும் முடிந்த வகையில் அந்த நல்வினை நிகழப்படவேண்டும் என்ற வள்ளுவரின் வரிகளுக்கிணங்க கடவுள் தண்டிப்பார் என்ற சிறுகதையை அறிஞர் அண்ணா படைத்துள்ளார்.

சுக வாழ்வு – சுதந்திரம் - உரிமை இவை அனைத்தும் மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் பெறநினைப்பது. இவ்வுரிமைகைளைப் பெற்றுக்கொடுப்பதும் மக்களாட்சி முறையின் பண்பாகும். ஒவ்வொரு தனிமனிதனுக்கும் இத்தன்னாட்சி முறையை அழிந்துவிடாமல் பாதுகாத்து வரவேண்டிய பொறுப்பு உள்ளது. இப்பொறுப்பை உணர்ந்து ஒருவன் செயல்படவேண்டும் என்று நினைத்தாலும் சமூகத்தில் மேலாதிக்கத்தில் இருக்கும் ஒரு சிலரால் தடுக்கப்படுகிறது. ஒடுக்கப்பட்டோன் தன் சக்திக்கு மீறிய, அக்கிரமக்காரர்களின் சக்தியை அழிக்க இயலாமல் கடவுள் தண்டிப்பார் என்று சொல்லிக்கொண்டு இருந்துவிடுகின்றனர். இந்நிலை மாறவேண்டும் சமூக நலன் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற பொதுநலச் சிந்தனையால் சில நிகழ்வுகளை நாட்டில் காடு என்னும் சிறுகதையின் வாயிலாக அண்ணா பதிவிட்டுள்ளார். காத்தான் என்னும் பணக்காரக் காமுகனின் கையில் சிக்கிக்கொண்ட கன்னிப்பெண் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள வழியின்றி கடவுள் தண்டிப்பார் என்று கடவுள் மீது பாரத்தைப் போடுகிறாள் வட்டிக்கடை வரதப்பரால் கடன்பட்டு ஏமாற்றப்பட்ட ஏழை இந்த அக்கிரமக்காரனைக் கடவுள் தண்டிக்கத்தான் போகிறார் என்று கூறி ஆறுதல் அடைகிறார். கள்ளன் ஒருவன் பணந்தேடியின் வீட்டில் நுழைந்து அனைத்தையும் எடுத்துச் செல்ல முனைகிறான். பணந்தேடி எவ்வளவோ முயன்றும் கள்ளனைத் தடுக்க இயலவில்லை. இதற்கான கூலியை கடவுள் கொடுப்பார் என்று கூறி திருப்திகொள்கிறான். தன்னம்பிக்கையற்ற கையாலாகாதவர்கள் சில நிமிஷ ஆறுதலுக்காக எதிர்க்காமல் ஏற்றுக்கொண்டதும், முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாக இருந்ததுமான 'கடவுள் தண்டிப்பார்' என்னும் வார்த்தை இனியும் கேடயமாக இருக்கக்கூடாது என்ற ததுவார்த்த வரிகளை கடவுள் தண்டிப்பார் சிறுகதையில் எதார்த்தமாக அண்ணா பதிவிட்டுள்ளார்.

***தீண்டாமை***

*தீண்டாமை எனப்படுவது தமிழகத்தில் இன்றும் இருதுந்துகொண்டுதான் இருக்கிறது. பார்ப்பனர்கள் பார்வையில் சூத்திரர்கள் அனைவருமே தீண்டத்தகாதவர்களாகும். சூத்திரர்களிலேயே தங்கள் முன்னேறிய சாதியினர் என்று கருதிக்கொண்டும் சிலர் வேறு சில சமுதாயத்தினரைத் தீண்டத்தகாதவர்களாக ஒதுக்கி வைத்துள்ளனர். ஒவ்வொருவருக்கும் தன்மானம் என்பது மிகவும் அவசியமே, மனிதர்கள் எவரும் அடிமையாய் இருக்க விரும்புவதில்லை. இதனை வலியுறுத்தியே 1700 ஆண்டுகளுக்கு முன்பாகவே 'மானம்' என்றதொரு அதிகாரத்தை வள்ளுவர் படைத்தார்.*

***"தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர்***
***நிலையின் இழிந்திக் கடை"10***

*இக்குறளில் அடிமைத்தனமின்றி தன்மானத்துடன் வாழ்தல் உயிரினும் மேலானதாகக் கருதப்படுகிறது. வெகுமக்கள் சமுதாயம் தன்னுணர்வின்றி என்றும் அடிமைகளாகவே இருத்தல் கூடாது. அனைத்து ஒடுக்கப்பட்ட சமூகத்தினரும் உணர்வு பெறச் செய்யும் நோக்கில் 'அவள் மிகப்பொல்லாதவள்' என்னும் சிறுகதையை அறிஞர் அண்ணா படைத்துள்ளார். இருப்த்தைந்து வயதிலேய விதவையான சுப்பய்யர் மகள் கமலத்திற்கு சுப்பிமகள் சரசா சுப்பிரமணி என்பவரை சீர்திருத்தமணம் செய்துவைக்கிறார். வேறு சாதியான் என்பதைக் காரணம் காட்டி சுப்பய்யர் கமலாவைச் சாடுகிறார். சாஸ்திரிகளே! உமது வைப்பாட்டி வள்ளி யார்? எந்த இனம்! பேசுவது வேதம் வேதாந்தம்! வேஷமோ சனாதனம் என்று கோபத்துடன சரசா சுப்பய்யரைச் சாடுவதைப்போன்றும் அமைந்த வரிகளின் மூலம் ஜாதிபாகுபாடற்ற சமூகத்தை அண்ணா விரும்புவதை அறிய முடிகிறது.*

***விதவை மறுமண ஆதரிப்பு***

*உடன்கட்டை ஏறுவதோ ஒருநாள் துன்பம் விதவையாய் வாழ்வதோ வாழ்நாள் முழுவதும் வளரும் சித்திரவதை. எனவே சிந்தனையாளர்கள் விதவை ஒழுக்கத்துடன் வாழ, மறுமணமே சிறந்த வழி என்பர். 'பூங்கொடியில் விதவை இல்லை' மான் குலத்தில் விதவை இல்லை, இப்படி அறிவில்லாப் பொருள்களில் கூட விதவை இல்லை. ஆனால் பகுத்தறிவுடைய மனித இனத்தில் விதவை ஏற்பட்டது எப்பதடி? என்று கண்ணதாசன்*

***"பகுத்தறிவு கொண்ட மாந்தர் – தாம்***
***அறிவில் விதவை யானார்"[11]***

*என மனித சமுதாயம் அறிவிழந்து போனதே இதற்குக் காரணம் என்றுரைக்கிறார். அவள் மிகப் பொல்லாதவள் சிறுகதையில் கண்ணதாசனின் வரிகளுக்கிணங்க விதவை மறுமணத்தை ஆதரித்து அறிஞர் அண்ணா வலியுறுத்தியமையை அக்கதையில் இடம் பெற்றுள்ள கமலா என்ற மாந்தரின் வாயிலாக அறியமுடிகிறது.*

**முடிவுரை**

ஆளும் வர்க்கத்தாரின் அதிகாரப்பிடியில் சிக்கிச்சிரழியும் கொத்தடிமைகளின் நிலையை சமூகத்திற்கு பிரதிபலித்து அந்நிலையைக் களைய முற்படல்தனது புத்திக்கும் பிரத்தியட்ச அனுபவத்திற்கும் தோன்றுவதை நம்பாமல் எவனோ ஒருவன் எப்போதோ சொன்னதை நம்பி வாழ்வை நடத்தும் மூடர்களைச் சாடுதல் சில நிமிஷ ஆறுதலுக்காக முடக்கிப்போடும் வார்த்தைகளை எதிர்க்காமல் ஏற்றுக்கொண்டோரைச் சாடியும் கற்பு என்கிற கருத்தினைக் கொண்டு விதவாவி வாகத்தை மறிக்க முற்படுவோரைச் சாடுதல் எனப் பல்வேறு நிலைகளிலும் பல்நோக்கு சமூகச்சிந்தனைகளுடனேஅறிஞர் அண்ணா செயல்பட்டுள்ளமையை இக்கட்டுரையின் வாயிலாக அறியமுடிகிறது.

**சான்றெண் விளக்கம்**

1. டாக்டர் நா.ஆறுமுகம், கவிஞரும் அறிஞரும், பக். 11-12.
2. சி.கனகசபாபதி, எதார்த்தவாதம், பக். 19,20
3. க.பஞ்சாங்கம், இலக்கியத்தின் இருப்பியலும் திறனாய்வின் இயங்கியலும், ப.67.
4. தமிழண்ணல், நான்.செல்வராசு, ஆய்வுக்கோவை 1996, ப.1010.
5. சுப.கதிரேசன், கண்ணதாசன் பாடல்களில் சமுதாய சிந்தனைகள், ப.47.
6. மா.நன்னன், பெரியார் கணினி, ப.863.
7. மேலது
8. அ.ம.சத்தியமூர்த்தி, சமூக நீதிக்காவலன், ப.67.
9. திருக்குறள் – அறத்துப்பால் உரைவிளக்கம், பொற்கோ ப.21.

**துணைநூற் பட்டியல்**


1. **நா.ஆறுமுகம் - கவிஞரும், அறிஞரும்,**
   **கன்னி பதிப்பகம்,**
   **109, காந்தி வீதி, முத்தியாலுபேட்டை**
   **புதுச்சேரி – 605 003**
   **பதிப்பு – டிசம்பர் 1993**

2. **சுப.கதிரேசன் - கண்ணதாசன் பாடல்களில் சமூதாய சிந்தனைகள்**
   **மணிமேகலை பிரசுரம்,**
   **தியாகராயநகர், சென்னை – 600 017**
   **பதிப்பு – 2016**

3. **அ.ம.சத்தியமூர்த்தி - ஒடுக்கப்பட்டோர் உரிமைப்போரில் சமூக நீதி காவலன்**
   **மகேந்திரன் பதிப்பகம்,**
   **சாலியார் தெரு, அம்மச்சத்திரம்**
   **தஞ்சாவூர் மாவட்டம்**
   **பதிப்பு – டிசம்பர் 2002**

4. **நா.செல்வராசு - ஆய்வுக்கோவை**
   **புதுவைப் பல்கலைக்கழகம்**
   **புதுச்சேரி – 605014**
   **முதற்பதிப்பு – 1996**

5. **க.பஞ்சாங்கம் - இலக்கியத்தில் இருப்பியலும், திறனாய்வின் இயங்கியலும்**
   **காவியா பதிப்பகம்,**

***பெங்களூரு***
***பதிப்பு – டிசம்பர் 2000***

***6. மா.நன்னன் - பெரியார் கணினி***
***ஞாயிறு பதிப்பகம்,***
***சைதாப்பேட்டை, சென்னை – 600015***
***முதற்பதிப்பு - 2009***

***7. பொற்கோ - திருக்குறள் அறத்துப்பால் உரை விளக்கம்***
***பூங்குழலி வெளியீடு***
***16/10, அடையாறு, சென்னை – 600020***
***பதிப்பு - 2004***